RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# செவ்வியல் இலக்கியங்களில் தொழில்நெறிகள்

**நீ. பகவதியம்மாள்** [அ *]

[அ] தமிழ்த்துறை, பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641014, இந்தியா

# Work Ethic and Professional Ideals in Classical Tamil Literature

**N. Bhagavathiammal** [a, *]

[a] Department of Tamil, PSG College of Arts and Science, Coimbatore-641014, India

*Corresponding Author:
bhagavathiammal@psgcas.ac.in

**ABSTRACT**

Occupation is one of the most significant means through which human beings define their identity and contribute to society. The ancient Tamils believed that success in life was achieved through sincere effort and diligent labor. Classical Tamil literature, particularly the ethical traditions reflected in Sangam works and the Tirukkural, celebrates a society in which individuals recognized their responsibilities and fulfilled them with integrity and dedication. Work was regarded not merely as a means of livelihood but as a noble pursuit that fostered individual dignity, social harmony, and collective prosperity. Occupational activities played a vital role in strengthening social unity and promoting the welfare of the community. Individuals devoted themselves to their respective professions with commitment and excellence, thereby enhancing productivity and contributing to the economic development of society. Rather than being driven solely by material gain, occupations were valued as honorable vocations that reflected personal virtue, skill, and social responsibility. Consequently, professions were viewed with equal respect and were not intended to create social superiority or inferiority among people. This study examines the occupational ethics reflected in classical Tamil literature, exploring how the ancient Tamil people regarded work as a source of personal fulfillment, social responsibility, and cultural progress. It highlights the contribution of occupational values to the development and advancement of early Tamil society and demonstrates the enduring relevance of these ideals in understanding the work culture of the classical Tamil tradition.

**Keywords:** Occupation, Sangam Works, Social Responsibility, Classical Tamil Literature

## முன்னுரை

மனிதன் தன்னை இனம் காணும் பண்புகளில் சிறந்ததாய் போற்ற பெறுவது தொழிலாகும். உன் உடலில் உழைப்பை கருதியே வாழ்வின் வெற்றி அமையும் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தனர். சங்கச் சமூகம் தன்னைத்தானே இனம் கண்டு கொள்ளும் உயர் உள்ளம் கொண்ட நல்லோர் வாழ்ந்ததன் சிறப்பை திருக்குறள் குறிப்பிடுகின்றது. பண்டைத் தமிழ் மக்களின் தொழில் அடிப்படையில் ஆன வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் விளக்குவதே இவ்வாய்வாகும்.

## தொழில் பிரிவுகள்

தொழில் பிரிவுகள் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்று நில அடிப்படையிலான பகுக்கப்பட்ட ஒழுக்க வரையறை தொழிலுக்கும் பொருந்தும்.

இயற்கை செயல்பாடுகள் மனிதத் தேவைகளை நிறைவு செய்தது. அதனால் நில இயற்கைக்குத் தகுந்தவாறு சங்ககால மக்களின் தொழில் அமைந்தது. இயற்கையோடு இணைந்து வாழும் மக்களில் உயர்வு தாழ்வு இல்லை. தட்பவெப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப நிலத்தின் தன்மை மாறும். இதனை

உணர்ந்த மக்கள் நில இயற்கைக்குத் தகுந்தவாறு தாங்கள் செய்ய வேண்டிய தொழில்களை வரையறுத்துக் கொண்டனர். அவர்கள் செய்யும் தொழில் அவர்களின் உணவுத் தேவையை மையமிட்டு அமைந்தது. இதனை விளக்கும் புறப்பாடல்

தென்கடல் வளாகம் பொதுமை இன்றி

வெண்குடை நிழற்றிய ஒருமையொர்க்கும்

நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்

கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்

உண்பது நாழி உடுப்பவை இரண்டே

பிறவும் எல்லாம் ஓர் ஒக்கும்மே (புறநானூறு189)

தொழில் வெறும் பொருள் சார்ந்தது அன்று. அறம் சார்ந்தது. அறம் சார்ந்து அமைவது ஆகும். அதனால் தான் அறம் பொருள் இன்பம் வீடு என்ற குறிக்கோள்களை கொண்டு தமிழர்கள் வாழ்வை செம்மைப்படுத்தினர்.

“மனித வாழ்வில் அடையத்தக்க பேறுகள் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கே! இவற்றுள் அகப்பொருளாய் அமைந்த இன்பமே வாழ்வின் உயிர்ப்பண்பு, உயிர்க்கூறு, உயிர்நாடி=இன்பம் விளைவது இயல்பு. இன்பம் காண மனிதன் பொருளைத் தேடுகின்றான். பொருளை கொண்ட அறம் நாடுகின்றான். இன்பமும் பொருளும் அறமும் செம்மையாய் செய்பவன் மனிதன்” (கழக வெளியீடு, தமிழ் இலக்கிய வரலாறு, பக்கம்-5)

மனிதர்களின் அடிப்படைத் தேவையான உணவு, உடை, உறைவிடம் பற்றி நன்கு சிந்தித்து செயலாற்றியவர்கள் பண்டைய மக்கள். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற இயற்கை சார்ந்த மலர்களின் பெயர்களை நிலங்களுக்கும் பெயராக அமைந்தது. மலர்களின் மென்மை போல மனித மனங்களிலும் மென்மையான பண்புகள் சிறப்புப் பெற்றன. இந்நிலப் பிரிவுகளே தொழிலுக்குரிய நல்ல நெறியாக அமைந்தன. தன்னைச் சிறப்பான எண்ணங்களால் உணர்ந்த மனிதர் தன்னுடைய வளர்ச்சிப் பாதைக்கான முதன்மைத் தகுதியாக தொழிலை வடிவமைத்தான். அத்தொழில் எவ்வித உயர்வு தாழ்வுகளுக்கான வேற்றுமை எண்ணங்களை வளர்க்காத சூழலை மிக கவனமாக கையாண்டது சிறப்பாகும். வேற்றுமைகளைக் களைந்து நல்லதொரு சமூகமாக உருவாக்கிய சங்க சமூகத் தொழில்கள் விழுமியச் சார்புடையதாகும். தொழில்களில் பாகுபாடு இல்லாத மேல், கீழ் என வேற்றுமை கருதாத சமூக உரிமை மிளிர்ந்தது. மனிதனின் ‘உயர்வு தாழ்வு இல்லை’ என்பதை உணர்ந்த காலம் சங்க காலம். அதனால் தான் நாடாளுமன்னனும் தன் சக வீரர்களோடு உண்டு களித்து உறைந்தான் என்று பல சங்கப் பாடல்கள் சான்று தருகின்றன. மனிதர்கள் செய்யும் தொழிலில் வேற்றுமை காண்பது அறிவீனம் என்பதை உணர்ந்த சங்கச் சான்றோர்கள் உடை அழுக்குகளை உலர்த்தி வெளுக்கும் ஆடை வெளுப்பவளையும் “நலத்தகை புலத்தி” என்று மேன்மை சான்ற சொல்லால் வர்ணிக்கின்றனர்.

“நலத்தகைப் புலைத்தி பசை தோய்த்தெடுத்துத்

தலைபுடைப் போக்கித் தண் கயத் திட்ட” (குறுந்தொகை 330)

என்று குறுந்தொகை வரிகளும்

“பசைவிரற் புலைத்தி நெடிது பிசைந்து ஊட்டிய

பூந்துகில் இமைக்கும் பொலன்காழ் அல்குல்” (அகநானூறு38)

என்ற அகநானூற்று வரிகளும் மேற்கண்ட விளக்கத்திற்குச் சான்றாதாரமாகும்.

பாணர் கூத்தர் விரலியர் என்ற பெயர்கள் அவர்கள் செய்கின்ற தொழில் அடிப்படையிலேயே வந்த பெயராகும். என்றாலும் அகத்திணைக் காதலில் சிறப்புப்பெற்றத் தலைமக்களின் உடல் தீர்க்கும் கருவியாக பயன்படுமாற்றைத் தொல்காப்பியம்

தோழி தாயே பார்ப்பான் பாங்கன்

பாணன் பாடினி இளையர் விருந்தினர்

கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்

யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப (தொல்காப்பியம் பொருள் கற்பு-52)

என்று குறிப்பிடுகின்றது வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கு தொழில்களை கற்றுக் கொண்ட மனிதன் தான் மட்டும் உண்டு வாழாது மற்றவர்களும் வாழ்வதற்கு

துணை புரிந்தான். பொருள் தேடுவதன் குறிக்கோள் தான் மட்டும் வாழ்வதன்றித் தன்னைச் சூழ்ந்த சுற்றமும் வாழ்வதற்கு வழி கோலுவதாகும். பொருளீட்டுவதற்காகச் செய்கின்ற தொழில் அறம் நிறைந்து நன்மைகளை மிகுவிக்கின்ற ஆற்றல் உடையது.

ஆடை துவைக்கின்றவர்களும் தாங்கள் தொழிலில் தூய்மை உடையவர்களாக இருந்தனர். பலரது ஆடைகளை வெளுக்குகின்ற இவர்கள் ஓய்வின்றி அடித்துத் துவைத்து ஆடைகளைத் தூய்மையாக்கிய காட்சியை

உடையோர் பான்மையின் பெருங்கை தூவா

வறன் இல் புலைத்தி (நற்றிணை - 90)

என்று பாடல் சுட்டுகின்றது.

அறவழியில் வாழ்வினைச் சிறப்பிக்கும் சங்கச் சான்றோரின் பொருள், இல்லாமையை இல்லாமலாக்கும் முயற்சியுடையதாக விளங்குகின்றது. தன்னைக் காத்து போற்றுவதை விட தமரைக் காத்து வாழ்வதே மேன்மையானது என்பதை அகநானூறு

“இல்லோர்க்கு இல் என்று இயைவதுகரத்தல்

வல்லா நெஞ்சம் வலிப்ப, நம்மினும்

பொருளே காதலர் காதல்” (அகநானூறு - 53)

என்ற இப்பாடல் இல்லோர்க்கு ஈய வேண்டிக் காதலை துறந்த தலைவனை பற்றிய தலைவியின் எண்ணமாக அமைந்தது.

ஆண் வலிமை வாய்ந்தவன். அவனே நாட்டின் காவலன். நாடு போற்றும் நற்புகழுடையோனான ஆண்மகன் வினையே உயிராகக் கொண்டு ஒழுகல் வேண்டும். வினை என்பதைத் தொழிலின் வடிவமாகவே கொள்ளலாம். ஆண்மைக்கு அழகு தொழிலாகும் என்பது வரைமுறை காணப்படாத ஒரு அற ஒழுக்கமாகும். இதனை வலியுறுத்தியே

“வினையே ஆடவர்க் குயிரே” (குறுந்தொகை -135)

என்கிறது குறுந்தொகை.

வாழ்வதன் பயனை உணர்ந்தவன் நம் சங்கச் சான்றோர். வாழ்வதை பயனுடையதாக்கப் பொருள் தேடினர்.தேடிய பொருளை வாடி நின்றோர்க்கு வாரி வழங்கினர். கூற்றத்தாலே இறக்காமல் பிறருக்கு கொடுத்து அதன் பயனை எய்திய பின் இற்த்தலே நல்வினையாகக் கருதினர். இதனை அகநானூறு

“நோற்றோர் மன்ற தாமே கூற்றம்

கோளுற விளியார், பிறர் கொள விளிந்தோர்” (அகநானூறு 61)

என்று குறிப்பிடுகின்றது.

வாழ்க்கைக்கு பொருள் அவசியம் அப்பொருள் நல்லதொரு வினைக்கு மட்டுமே பயன்படுமேயன்றி வழுவியதாகாது என்பதைத் தன் உணர்ச்சியில் ஊன்றியவர்கள் சங்க காலத்தவர். நாம் ஈட்டுகின்ற பொருள் தன்னை எதிர்த்தவர்களைத் தாக்கும் கருவியாகவும், தன்னை நம்பியவர்களுக்கு உதவியாகவும், இல்லை என்று வருவோருக்கு கொடுக்கும் கொடையாகும் அமைய வேண்டும் என்பதை,

“தெருவோர் செம்மல் வாட்டலும்! சேர்ந்தோர்க்கு

உறும் இடத்து உவக்கும் உதவி ஆண்மையும்

இல் இருந்து அமைவோருக்கு இல் என்று எண்ணி” (அகநானூறு 231)

என்று அகப்பாடலும்

“அரிதாக வறனெய்தி அருளியோருக்கு அளித்தலும்

பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்

புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்

பிரிவெண்ணிப் பொருள் வயிற் சென்ற நங் காதல (கலித்தொகை-11)

என்று கலித்தொகைப் பாடலும் இதற்கு சான்றாகும்.

தான் செய்கின்ற தொழிலில் ஊக்கமும், சோர்விலாத பண்பும் உடையவர்களாய்த் திகழ்ந்தனர் சங்கமக்கள். இதனை அகநானூற்று பாடல்கள்

"அழிவுஇல் உள்ளம் வழிவழிச் சிறப்ப

வினை இவண் முடித்தனம்" (அகநானூறு47)

"அருளன்று ஆக, ஆள்வினை ஆடவர்

வலித்த பொருளல் காட்சியின்

மைந்து மலி உள்ளமொடு துஞ்சல் செல்லாது" (அகநானூறு 47)

என்று குறிப்பிடுகின்றது.

## தொழில் முயற்சிகள்

"தொழில் முயற்சிகள் வாழ்க்கைக்கு கட்டாயமாய் இருக்கிறது. முயற்சிகள் இரண்டு வகை உண்டு ஒன்று உடம்பு முயற்சி மற்றொன்று அறிவு முயற்சி. பொதுவாக உடம்பு முயற்சியைத் தொழில் என்றும், அறிவு முயற்சி கலை என்றும் சொல்லலாம்" தி.சு.பாலசுந்தரன் சங்க நூல் கட்டுரைகள் பக்கம் - 73)

வாழ்வியலுக்கான மிக முக்கியமான பொறுப்பு வகிக்கின்றவர்களை நான்கு நிலையாக பகுக்கலாம். அவர்கள் தன் தேவைகளை மட்டுமின்றி நாட்டின் நலனுக்காகவும் உழைப்பவர்கள். அவர்களை முன்னிலைப்படுத்துவதே தமிழ் சமுதாயத்தின் பெருமையாகும். அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்ற நான்கு பிரிவுகள் மக்களிடையே காணப்பட்டன. அந்தணர்கள் அரசு சார்ந்த அரசை வழிநடத்துகின்ற ஆற்றல் சான்றவர்கள். அதற்கு அவர்கள் கைக்கொண்ட பொருட்களே காரண காரியமாகும்.

"நூலே கரகம் முக்கோல்மனையே

ஆயுங்காலை அந்தணர்க்குரிய" (தொல்காப்பியம் பொருளதிகாரம் மரபியல் 66)

தான் கைக்கொண்டுள்ள அறிவு நூல், கமண்டலம், முக்கோல், ஆசனம் இவைகள் அந்தணர்கள் அறிவைப் பண்படுத்தி பயன்படுத்துகின்ற களமாக பயன்படுத்திருக்கின்றனர்.

"அரசருக்கு ஆலோசனை கூறுவது, நாட்டு மக்களுக்கு நல்லுரை வழங்குவது, மக்களின் நல்வாழ்வுக்காக கடவுளை வேண்டி தவம் கிடப்பது, இவைகளும் அந்தணர் கடமை. (சாமி சிதம்பரனார் தொல்காப்பிய தமிழர் பக்கம் 51)

அந்தணர்களுக்கான ஆறு தொழிலை திவாகரம்

ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல்

ஈதல் ஏற்றல் என்றிரு மூவகை

ஆதி காலத்து அந்தணர் அறுதொழில்" (திவாகரம்-118)

என்று குறிப்பிடுகின்றது

இக்கூற்றையே தொல்காப்பியமும்

"அறுவகைப்பட்ட பார்ப்பன பக்கமும்"

என்று கூறுகின்றது.

அந்தணர்கள் வேதங்களை ஓதி மக்களுக்கு நல்வழி காட்டும் நனிசிறந்தோராவர். வேதநெறியைப் பின்பற்றி வாழ்ந்தனர். நாட்டின் நன்மை கருதி வேதம் ஓதினர் என்பதை, "பகைவர் புல்லார்க பார்ப்பார் ஓதுக". (ஐங்குறுநூறு-4)

என்கிறது ஐங்குறுநூறு

சிறந்த வேதங்களை கூறுகின்ற நாவினையும் நூல்களில் கூறப்படும் நல் ஒழுக்கங்களையும் பின்பற்றும் கொள்கைகளையும் உடைய அந்தணர்களின் பண்பு நலன்களை

"அறம்புரி அருமறை நவின்ற நாவின்

திறம்புரிக் கொள்கை அந்தணீர்" (ஐங்குறுநூறு-387)

என்ற பாடல் வரிகள் வழி உணரலாம். அந்தணர்களுக்கு உரிய தொழில் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ற ஆறாகும். இவ்வாறு தொழிலை முறையாகச்செய்தொழுகும் அந்தணர் வழி அரசரும் ஏனையோரும் ஒழிகினார்கள். அறம் புரிந்து வாழ்வைப் பிறருக்காக வாழும் அந்தணர்களுக்குப் பணிய வேண்டும் என்பது பண்டையோர் கொள்கை. நாடாளும் மன்னனே பார்ப்பானுக்குப் பணிந்த செய்தியை

"பார்ப்பார் அல்லது பணியறியலையே" (பதிற்றுப்பத்து-63)

என்கிறது.அந்தணர்கள் மக்களின் நலன் கருதி வாழ்கின்றார். ஆதலால் அவர்கள் நோவன செய்தல் ஆகாது என்பதை,

நிலமிசை வாழ்நர் அலமரல் தீர

தெரு கதிர்க் கனலி வெம்மை தாங்கி

கால் உணவு ஆக, சுடரோடு கொட்கும்

அவர் சடை முனிவரும் (புறநானூறு-43)

என்ற புறநானூற்று பாடல் வழி அறியலாம்.

## அரசர் தொழில்

அரசர் தொழில் நாடாளும் மன்னன் மக்கள் தொழிலாளி. மக்களுக்கு சாதகமான நல்லாட்சியைத் தருவதே மன்னன் தொழிலாகும். மற்றைய தொழில்களுக்கு ஊக்கம் அளித்து மக்களுடைய வளர்ச்சிக்கு நல்லதொரு வழிகாட்டியாக மன்னன் விளங்கினார். மன்னனுக்கு உரியவையாகத் தொல்காப்பியம்

படையும் கொடியும் குடையும் முரசும்

நடைநவில் புரவியும் களிரும் தேரும்

தாரும் முடியும் நேர்வன பிறவும்

தெரிவுகொள் செங்கோல் அரசர்க்கு உரிய

(தொல்காப்பியம் பொருள் மரபு-67)

என்று குறிப்பிடுகின்றது.

நீர் வளத்தை பெருக்கினால் மண்வளம் பெருகி மக்கள் வளமடைவர் என்பதை மன்னன் உணர்ந்து இருந்தான். குடிமக்களின் வேளாண்மைக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுப்பது அரசனுடைய கடமையாகும். நிலத்தில் உள்ள பள்ளங்களை ஆய்ந்து அங்கெல்லாம் நீர்நிலைகள் தேங்கும்படியான கரைகளை நிறுவி அறம் செய்தவரே இந்த உலகத்தில் தம் பெயரை நிலை நாட்டியவர் என்பதைப் புறநானூறு

"நிலன் நெளி மருங்கின் நீர்நிலைப் பெருக

தட்டோரம்ம இவண் தட்டோரே

தள்ளாதோர் இவண் தள்ளாதோரே" புறநானூறு -18

என்கிறது.

வேளாண்மை மூலம் நாட்டின் வளத்தை பெருக்கிய அரசன் வருவோர்க்கு எல்லாம் வாரி வழங்கிய கொடைப் பண்பை பதிற்றுப்பத்து

நென்மிக்கு

அறைஉரு கரும்பின் தீஞ்சேற்று யாணர்

வருநர் வரையா வளம் வீங்கு இருக்கை" (பதிற்றுப்பத்து-75)

என்கிறது.

மன்னன் மக்களை வழிநடத்துவதற்கு நல்லதொரு வழிகாட்டிகளாக செயல்பட்டான் அவர்களுக்கு என்று சில பணிகளை நியமித்து மக்கள் மாண்புற அரசு செய்தான். கோ என்ற பெயர் பெற்ற மன்னன் ஐம்பெருங்குழு உறுதிச் சுற்றம் எண் பேராயம் என்ற உறுதிக் குழுக்கள் துணை இருக்க ஆட்சி புரிந்தான். அமைச்சர் போற்றியர், படைத்தலைவர், தூதர் ஒற்றர் என்பவர்கள் கூடிய குழு ஐம்பெரும் குழுவாகும். இவர்கள் தமக்கென்று சில தொழில்களை வகுத்துச் செயல்பட்டனர். அமைச்சர்கள் சூழ்ந்த குழுக்கள் சுற்றம் எனப்பட்டனர்.

## முடிவுரை

தொழில் மக்களின் வாழ்வில் ஒருமைப்பாட்டுணர்வை வளர்த்து சமூக நலனுக்கு வலிமையாக இருந்திருக்கிறது. அவரவருக்கு என்று விதிக்கப்பட்ட தொழில் மாண்பில் உயர்ந்து பொருள் உற்பத்தியைப் பெருக்கிட பாடுபட்டுள்ளனர். தன்னை முழுமையான மதிப்பீட்டில் உயரச்செய்யும் சிறந்த விழுமிய தகுதி பெற்ற தொழிலின் மேல் பொருள் பற்று இன்றி அதன் மீது கொண்ட ஆர்வமே ஒவ்வொரு மனிதனுக்கும் தொழில் வாய்ப்பாக அமைந்தது. மக்களுள் உயர்வு தாழ்வு ஏற்படாத உயர் மதிப்பீடாகவே தொழில்கள் அமைந்தன.

## References


Avvai Duraisamy Pillai, Su., (1947) Purananuru, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Parimanam, A.M., Balasubramaniyam, K.V., (2004) Akananuru, New Century Book House Pvt Ltd, Chennai, India

Parimanam, A.M., Balasubramaniyam, K.V., (2004) Natrinai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Varadharasan, Mu., (2004) Thirukkural Thelivurai, The South India Saiva Siddhantha Works Publishing Society, Tinnevelly, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License